**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 80/2022**

**PW. 1**

**Date: 05.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வேலாயுதம் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | பெருமாள் | மதம் | |
| கிராமம் | பொம்மராஜபுரம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **05th June 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் ரிலையன்ஸ் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிகிறேன். 07/01/2019 அன்று காலை எனது நிறுவனமான கேளம்பாக்கம் ஜியோ ஸ்டோர் அருகில் காலை மணியளவில் பேசன்புரோ TN 19 M 4722 என்ற இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்து இருந்தேன். காலை 10 மணியளவில் மீண்டும் வெளியே வந்து பார்த்தபோது என்னுடைய இருசக்கர

வாகனத்தை காணவில்லை. அருகில் தேடி பார்த்தும் எனது இருசக்கர வாகனம் கிடைக்கததால் 13/01/2019 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் **(புகார்)** உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான். ( **09/01/2019 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது** )

2. 29/04/2019 அன்று திருடு போன என்னுடைய இருசக்கர வாகனம் கிடைத்து இருப்பதாக போலிசார் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்று என்னுடைய இருசக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். போலிசார் என்னுடைய இருசக்கர வாகனத்தை திருடியவர்களை அடையாளம் காண்பித்தார். தற்போது ஆஜரில் உள்ள 2 ஆம் எதிரி அங்கு இருந்தார். மற்றொரு நபரை பார்த்தால் அடையாளம் சொல்வேன். நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய இருசக்கர வாகனத்தை இடைகால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன்.

**வழக்கு சொத்தை ஆஜர்படுத்தவும் குறியீடு செய்யவதற்காவும் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- K.Nilavarasan, 05.06.2025
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**